# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

"இறையாட்சிப் பணிக்கு இறை உடனிருப்பு உண்டு" என்ற சீர்மிகு சிந்தனையை நமக்கு வழங்குகின்றது இன்றைய வழிபாடு.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று."

என்னும் வள்ளுவனின் வாக்கிற்கேற்ப இருந்தால் நல்ல கனி தர வேண்டும். இல்லாவிட்டால் வெட்டப்பட வேண்டும் என்கிறது இன்றைய நற்செய்தி.

"மனம் மாறாவிட்டால் நீங்களும் அவ்வாறே அழிவீர்கள்" என்று இயேசு கூறுவதிலிருந்து, கடவுள் தாழ்த்துவது 'பாவிகள் மனம் மாறவே!' என்று நாம் உணர வேண்டும். அத்திமர உவமையில் காய்க்க காலம் தரப்படுகிறது என்பது கடவுளின் பலவீனமல்ல, மாறாக அவரது இரக்கமே.

நல்ல செயல்கள், நல்ல சொற்கள், நல்ல பண்புகளே சீடத்துவத்தின் நற்கனிகள். "நீங்கள் மிகுந்த கனி தந்து, என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது" என்று அழைப்பு விடுக்கும் நம் இயேசுவின் குரலுக்குச் செவிகொடுப்போம்.

நீதிக்கான பாதையைத் தேடும் மனமாற்றமும், நேர்மையின் வழித்தடத்தில் தடம்பதிக்கும் உண்மை வாழ்வும் இப்பூமியில் வாழும் எல்லோருக்குள்ளும் ஏற்பட வேண்டும். இத்தவக்காலம் இறைவன் தரும் இரக்கத்தின் காலமாக, இறைவன் நம்மை மனமாற விட்டு வைக்கும் காலமாகக் கருதி நற்கனி தர முயல்வோம். இரக்கம் நிறைந்த இறைவனின் இதயத்தில் இடம் பிடிக்கும் மக்களாக வாழ அருள் வேண்டி இப்பலியில் இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை (விடுதலைப்பயணம் 3: 1-8a, 13-15)

இன்றைய முதல் வாசகம், மக்களின் துயர் கண்டுத் துடிக்கின்ற கடவுளைக் காட்டுகிறது. ஒளிந்த, மறைந்த வாழ்க்கை வாழ்ந்த மோசே, இஸ்ரயேல் மக்களின் விடுதலை வீரராய் உருமாற்றம் பெறுவதையும், கடவுளுக்கும் மோசேக்கும் இடையே நடைபெறும் உரையாடலையும் இவ்வாசகத்தில் கேட்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (1 கொரிந்தியர் 10: 1-6, 10-12)

இரக்கம் நிறைந்த கடவுளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற நற்கனி தராவிட்டால் இஸ்ரயேல் மக்களுக்கு ஏற்பட்ட அதே அழிவும் நமக்கும் நேரிடும் என்று எச்சரிப்பதோடு, தாம் நிலையாக நிற்பதாக நினைத்து கொண்டிருப்பவர் விழாதபடிப் பார்த்துக் கொள்ளட்டும் என்று கூறும் புனித பவுலடியாரின் அறிவுரைக்குக் கவனமுடன் செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்:**

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. நான் சொல்வதையெல்லாம் செய்யுங்கள் என்று உம்மால் அழைக்கப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் மோசேயைப் போல, இயேசுவின் குரலுக்குச் செவிமடுத்து, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை மீட்பின் பாதையில் வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் இறைவா! நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரும் பார்வோனின் மனநிலையைக் கொண்டிராமல், எல்லா மக்களும் அமைதி, சமாதானம், வளமான வாழ்வினை மக்கள் பெற்றுக் கொள்ள தேவையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க ஞானத்தைக் கொடுக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களோடு என்றும் வாழும் இறைவா! இந்த கொடிய கொள்ளை நோயின் காலத்தில், இந்த நோயினால் அவதியுறுகின்ற அனைத்துப் பிள்ளைகளுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். நோயின் கொடுமையினால் தனிமை, வெறுமை, பாதுகாப்பின்மை, இயலாமை, கண்டுகொள்ளாமை போன்றவற்றால் தன் வாழ்வில் துன்புறுகின்ற அனைவரையும் நீரே கண்ணோக்கி, மறுவாழ்வு கொடுத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இந்த உலகத்தை மீட்க தன்னையே தியாகமாக்கிய இறைவா! தவக்காலத்தில் பயணம் செய்யும் நாங்கள் எங்கள் பிள்ளைகளை நேரிய வழியில் நடத்தி, அவர்களின் எதிர்காலம் முழுவதும் கிறிஸ்துவுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வும், இன்றைய உலகத்தை அடிமைப்படுத்தியிருக்கும் கணினிமயம், அலைபேசிகள், போதைப் பொருட்கள், தவறான வழிமுறைகளை மாற்றி சரியான வாழ்க்கைப் பாதையை அமைத்து நிறைவாக வாழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com